©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 35] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 10, 2014
ஆவணி 25, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 45, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 28 மே 2014.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும் மேற்சொன்ன சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், அரசு மற்றும் தொழிலாளர் காப்புறுதித்திட்ட மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் நீங்கலாக மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் வேலைவாய்ப்புக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது தொடர்பாக, விசாரணைகள் நடத்தி, மாநில அரசுக்கு ஆலோசனை அளிப்பதற்காக பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்:—

**தனிப்பட்ட நபர்கள்:**

| | |
|---|---|
| (1) தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர்–I<br>சென்னை | தலைவர் |
| (2) தொழிலாளர் நல ஆய்வாளர்– III வட்டம்,<br>சென்னை | செயலாளர் |
| (3) உதவி இயக்குநர்,<br>பொருளியல் மற்றும் புள்ளிவிவரவியல் துறை<br>சென்னை – 600 006. | உறுப்பினர் |

**பணியாளர்களின் பிரதிநிதிகள்:**

| | |
|---|---|
| (1) திரு. எஸ். பி. எஸ். ராஜா,<br>செயலாளர்,<br>அண்ணா தொழிற்சங்கப் பேரவை (ATP)<br>44/1, பிச்சம்மாள் தெரு, சென்னை–600 081. | உறுப்பினர் |
| (2) திரு. எஸ். ராஜப்பா,<br>இந்திய தொழிற்சங்க மையம் (CITU),<br>2/C, சீனிவாசா அபார்ட்மென்ட்ஸ்,<br>11/30, சாதுல்லா தெரு, தி. நகர்,<br>சென்னை–600 017. | உறுப்பினர் |

(3) திருமதி எம். ராஜாத்தி, உறுப்பினர்
தலைமை செவிலி தொழில்நுட்பப் பணியாளர்,
(பொருளாளர், இந்திய தேசிய பொறியியல் பணியாளர் சங்கம், சுந்தரம் மெடிக்கல் பவுண்டேசன் கிளை),
(இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்),
சுந்தரம் மெடிக்கல் பவுண்டேசன், 9C, IV–நிழற்சாலை,
சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–600 040.

**வேலையளிப்பவரின் பிரதிநிதிகள்:**

(1) மருத்துவர் எஸ்.எம். சுந்தரராஜன், உறுப்பினர்
எஸ்.எம்.எஸ். மருத்துவமனை,
10, சிவன் வடக்கு ரத வீதி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி–627 002.

(2) மருத்துவர் ஏ. நாராயணசாமி, உறுப்பினர்
இயக்குநர், பில்ராத் ஹாஸ்பிடல்ஸ் லிமிடெட்,
எண் 35, முதல் தெரு, திருவள்ளுவர் நகர்,
கோட்டூர், சென்னை–600 085.

(3) மருத்துவர் டி.ஆர். பாலாஜி, உறுப்பினர்
முடநீக்கியல் அறுவைசிகிச்சை மருத்துவர்,
317/E, திலகராம் நர்சிங்ஹோம்,
நடுக்காட்டு இசக்கியம்மன் கோயில் சந்திப்பு,
கே.பி. சாலை, நாகர்கோயில்–629 003.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 49, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I1)த் துறை, 12 ஜூன் 2014.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிபந்தனைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 1–9–2006ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II – பிரிவு 2–இல், 1 மற்றும் 2ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட II(2)/LE/453(e–1)/2006 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்:—

## திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், விவர அட்டவணையில் ''தொடர் எண்1–இல் நெடும் பத்தி (1)–க்கு எதிரேயுள்ள நெடும்பத்தி (2) இல் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் நல வாரியம்'' என்ற தொடருக்குப் பதிலாக, ''*தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம்*'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 49, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I1)த் துறை, 12 ஜூன் 2014.]*

தமிழ்நாடு **1982**ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிபந்தனைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **33/1982**) **4**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், **1–9–2006** ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் பாகம் II - பிரிவு **2–**இல், **30–57** வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/453(e-4)/**2006** ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தில் (பின்னர் திருத்தியமைக்கப்பட்டது) பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்:—

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,**–**

**(1)** பகுதி **1** இன் துணைப்பகுதி **(1)**இல், ''தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்'' என்ற தொடருக்குப் பதிலாக ''தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

**(2)** மேற்சொன்ன திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள படிவங்கள் உட்பட தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் நல வாரியம் என்ற தொடர் வருமிடங்களிலெல்லாம் ''தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம்'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்**.**

**(3)** தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலநிதி ''என்ற தொடர் வருமிடங்களிலெல்லாம் ''தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலநிதி'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்**.**

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.